1980 பிப்ரவரி 4]

4. கோவை பி.எஸ்.ஜி. தர்ம ஸ்தாபனமும், குப்புசாமி நாயுடு தர்ம ஸ்தாபனமும் இணைந்து ரூபாய் 25 லட்சம் நன் கொடையாக கீழ்க்கண்டவாறு அளிக்கும்:—

> 1966 ஜூலை 15ஆம் தேதிக்குள் ரூபாய் 5 லட்சம் அளிக்கும். 1966ஆம் ஆண்டு முடிவதற்குள் ரூபாய் 5 லட்சம் அளிக்கும். அந்த நாளில் மருத்துவக் கல்லூரியின் அடிக்கல் நாட்டப்படும்.

மீதமுள்ள ரூபாய் 15 இலட்சத்தினையும் மூன்று தவணை களாக 5 இலட்சம் வீதம் 1967, 1968, 1969ஆம் ஆண்டுகளில் ஜனவரி திங்கள் இறுதிக்குள் அளிக்க வேண்டும். இதுவரை 5 இலட்சம் ரூபாய் தான் நன்கொடையாக வரப் பெற்றது. மீதம் தரவேண்டிய 20 லட்சம் ரூபாய் மறுக்கப்பட்டதற்கான காரணங்கள்:

1. அரசு கோவை மருத்துவக் கல்லூரிக்கு பெயரிடுவதில் தர்ம ஸ்தாபனங்களுடைய வேண்டுகோளை நிறைவேற்றவில்லை.

2. ஒவ்வொரு ஆண்டும் தர்ம ஸ்தாபனங்கள் குறிப்பிடும் 10 நபர்களுக்கு அல்லது மொத்த இருக்கைகளில் 10 விழுக்காடு அரசு ஒதுக்கீடு செய்வதற்கு கோரியுள்ளபடி ஒப்புதல் அளிக்க வில்லை. மேற்கூறிய இரண்டு கோரிக்கைகளையும் அரசு ஏற்க தயாராக இல்லை. ஏனென்றால் இது அரசு கடைப்பிடித்து வரும் முறைக்கு முரண்பட்டதாகும் என்று அரசு கருதியதே யாகும்.

குன்னூர் அரசு மருத்துவமனை.

*வினா எண் 38—திரு. க. அரங்கசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) குன்னூர் அரசு மருத்துவமனைக்கு தேயிலை வாரியத்தி லிருந்து எக்ஸ்ரே (எம்.எம்.ஆர். யூனிட்) அமைக்க ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கியது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: (அ) ஆம்.

(ஆ) குன்னூர் அரசு மருத்துவமனைக்கு தேயிலை வாரியம் அளித்த ரூபாய் ஒரு லட்சத்தை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. மருத்துவக் கருவிகளை உடனே வாங்கி மருத்துவமனையில் பொருத்துமாறு மருத்துவப் பணிகள் மற்றும் குடும்பநலத்துறை இயக்குநர் பணிக்கப்பட்டுள்ளர்.

திரு. க. அரங்கசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தேயிலை வாரியம் ஒரு லட்சம் ரூபாய் குன்னூர் மருத்துவ மனைக்கு வழங்குவதாக இருந்தது. இன்றைக்கு அதனுடைய நிலை என்ன என்பதை அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன். தேயிலை வாரியம் அளித்த ஒரு லட்சம் ரூபாயை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. மருத்துவக் கருவிகளை உடனே வாங்கி மருத்துவமனையில் பொருத்துமாறு மருத்துவப் பணிகள் மற்றும் குடும்பநலத் துறை இயக்குநர் பணிக்கப்பட்டுள்ளார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரின் வேண்டு கோளுக்கிணங்க வினா எண் 39, 40 ஒத்திவைக்கப்படுகின்றன. வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து அரசினர் சட்ட முன்வடிவுகள்.

திரு. நா. சுந்தரராஜ் : பாயின்ட் ஆப் ஆர்டர், சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோரு வார்.

திரு. நா. சுந்தரராஜ் : சார், நான் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கிறேன். சாதாரணமாக கேள்வி நேரம் முடிந்த பிறகு கேட்க வேண்டியதுதான். அனுமதிக்க மாட்டேன் என்று சொல்லக் கூடாது தாங்கள் . . . .